RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s26

OPEN ACCESS

# திவ்வியப் பிரபந்தத்தில் இசைக் கருவிகளின் வாயிலாக உணர்த்தப்படும் இறைநெறி

**லூ. ஜனார்த்தனன் [அ, *]**

[அ] இசைத்துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்-608002, தமிழ்நாடு, இந்தியா.

# Theology as expressed through musical instruments in the Divine Prabandham

**L. Janardhanan [a, *]**

[a] Department of Music, Annamalai University, Chidambaram-608002, Tamil Nadu, India.

* Corresponding Author: janaartist79@gmail.com

Received: 04-01-2021
Revised: 11-04-2021
Accepted: 15-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The alvars are known as the four thousand hymns of the alvars born and sung together and the four thousand divya prabandham. Thousands of opinions have been consumed. They have deep ergonomies of devotion. Tamil is sweet, simplicity and taste. It is a symmetry of literature. They have sung in these hymns to understand and correct the principles of society. In our article, we will find the musical instruments used in the Four Thousand Divya Prabandha.

**Keywords:** Alvars, Literature, Divine Prabandham, Music

## முன்னுரை

நாலாயிர திவ்விய பிரபந்தம் நாதமுனி அவர்களுக்கு நம்மாழ்வார் அருளியதாகும். நாதமுனி என்பவர் காலத்துக்கு பிறகுதான் தாளம், பண்கள் அமைக்கப்பட்டு பாசுரங்களை ஏட்டில் எழுதப்பட்டது. நாதமுனி அவர்களின் மருமகன்களின் சீடர்களும், சிக்யர்களும் நாலாயிர திவ்விய பிரபந்தத்தை வளர்த்து வருகிறார்கள் என்பது பல நூல்கள் மூலம், பல ஆய்வுகள் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம். ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் பன்னிரெண்டு ஆழ்வார்கள், தமிழகம், கேரளாவில் அவதரித்து பெருமான் என்னும் பக்தி கடலில்; ஆழ்ந்து, அருளிச் செய்தது நாலாயிர திவ்வியப் பிரபந்த பாசுரங்களாகும். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இசைக் கருவிகள், தாளங்கள் பற்றி காணலாம்.

## ஆய்வு விளக்கம்

ஆலயங்களில் பாடப்பட்டு வரும் நாலாயிர திவ்விய பிரபந்தங்களில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள் என்னென்ன என்பது நமக்கு கிடைக்கப் பெறவில்லை. பாசுரங்களில் வருகின்ற வார்த்தையின் மூலம் சில இசைக் கருவிகளின் பெயர் சொல்லப்பட்டு இருக்கின்றது. தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பயன்படுத்திய தாளங்கள், இசைக் கருவிகள் ஒருசில ஒன்றுபட்டுள்ளது. இசைக் கருவிகளைப் பற்றியும், தாளங்களை பற்றியும் விளக்கமாக காணலாம்.

## இசைக் கலையின் வளர்ச்சி

தமிழர் இசையினை ஆழ்வார்களின் பாடல்களைக் கொண்டு நோக்கும் போது சங்க கால இசையின் வளர்ச்சி நிலை உறுதிப் படுத்தப்படுவதாகத் தோன்றுகிறது. பல நிலைகளில் அக்கால இசை நிலை இப்பாடல்களில் வளர்ச்சியுற்று தொடர்ச்சி அறாது நிலைத்திருப்பதாகவே தோன்றுகிறது. பல்வகை இசைப்பாடல்கள் தோன்றியுள்ளன. பண்ணமைப்பில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டதாக அறிய முடிகிறது. இசையை மக்கள் விரும்பியுள்ளனர். அது இறைவணக்கத்துடன் இணைக்கப்பட்டு ஒரு புனிதத்தன்மைப் பெற்றுள்ளது. தமிழர் இசை மரபு இடையீடின்றி இயல்பாக வளர்ந்து வந்துள்ளது.

## இசைக் கருவிகள்

இசைக் கருவிகளைப் பற்றி மிகுதியான குறிப்புக்கள் திவ்வியப் பிரபந்தத்தில் இல்லாவிட்டாலும் ஒரு சில இடங்களில் பல கருவிகள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. கண்ணன் குழல் இசைக்கிறான், அதனைப் பெரியாழ்வார் விளக்குகிறார்.

‘மன்னரஞ் சும்மது சூதனன் வாயில்

குழலி னோசைசெவி யைப்பற்றி வாங்க

நன்ன ரம்புடைய தும்புரு வோடு

நாரதனும் தம்தம் வீணை மறந்து

கின்ன ரமிது னங்களும் தம்தம்

கின்ன ரம்தொடு கிலோமென் றனரே’ (பெரியாழ்வார்:3, 6, 5, 2-4)

புல்லாங்குழல், தும்புரு, வீணை, கின்னரம் ஆகிய பண்ணிசைக் கருவிகள் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. தும்புருவும் வீணையும் ஒன்றா என்ற வினாவும் இப்பாடலால் எழும்பிவிடுகிறது. தும்புரு, வீணை, கின்னரம் ஆகிய மூன்றுமே யாழின் இனங்களாகத் தோன்றி வெவ்வேறானவை என்று கருதலாம்.

பெரியாழ்வாரும் இசைக் கருவிகளைக் கையாளும் திறனுடையவராக இருக்க வேண்டும். அவர் தன்னைப் பற்றிக் குறிப்பிடும் போது,

‘குழல்முழ வம்விளம் பும்புது வைக்கோன்’ (பெரியாழ்வார்:3, 6, 11, 3,)

என்று கூறுகிறார். குழல் பண்ணிசைக் கருவி முழவம் தாளவிசைக் கருவி. இரண்டையும் ஒருவரே இசைத்துத் திறமையடைவது கடினம். அவ்வாறு இருப்பது பெருவழக்கும் இல்லை. ஆனால் ஆழ்வார் இவ்வாறு கூறுகிறார். இதை மேலும் எண்ணி உணர்வது நன்று.

ஆண்டாள் தனக்கும் கண்ணனுக்கும் மணம் நடப்பதைக் கனவாகக் கண்டு களிப்புடன் பாடுகிறார். அவ்வாறு பாடும் ஒரு பாடலில்,

‘மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத’ (நாச்சியார்;: 6, 6, 1)

என்ற அடி வருகிறது. மணவினை நடக்கும் போது மத்தளம் கொட்டப்படுகிறது. சங்கம் முழங்கப் பெறுகிறது. மத்தளம், சங்கம் ஆகிய இரு கருவிகளும் மங்கல இசைக் கருவிகள் என்பது நன்கு விளங்கும். மத்தளம் என்ற பெயர் முன்புள்ள நூல்களில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. தண்ணுமை அல்லது முழவம்தான் மத்தளம் என்று கூறப்பெற்றிருக்க வேண்டும். இன்று மிருதங்கம் என்று பெயர் கூறப்படும் கருவியே மத்தளம். இதன் தோற்றம் சங்க காலத்துக்கும் முந்தியது எனக் கருதலாம். இன்று காண்பது அதன் சீர்திருந்திய வளர்ச்சி நிலை என்பதை உணரலாம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் ஆயர்களின் வேய்ங்குழலைப் பற்றிய குறிப்பைத் தருகிறார்.

மேட்டிள மேதிகள் தலையிடும் ஆயர்

வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்

ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்

இரிந்தன சுரும்பனம்; இலங்கையர் குலத்தை' (தொண்டரடி: திருப்பள்ளி: 4, 1-2)

ஆயர்களின் மூங்கில் குழலோசையும் ஆநிரைகளின் கழுத்தில் கட்டியுள்ள மணிகளின் ஒலியும் கலந்து இனிய இசையாகி திசையெல்லாம் பரந்து ஒலிக்கிறது. கோவலர்கள் குழலூதுவதைச் சங்ககால இலக்கியங்களிலிருந்தே அவர்களின் இயல்பான பழக்க வழக்கமாகப் பார்க்கலாம். அந்த வழக்கம் காலத்தைக் கடந்து பக்தி காலத்திலும் பயில்வதைக் காணலாம்.

இன்னொரு இடத்திலும் தொண்டரடிப்பொடியாழ்வார் இசைக்கருவிகளைக் குறிப்பிட்டுப் பாடுவதைக் காணலாம்.

ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி

யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி

கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்

கந்தரு வரவர் கங்குலு ளெல்லாம்' (தொண்டரடி: திருப்பள்ளி: 9, 1-2)

கின்னரர் கீதங்கள் பாடுகின்றனர் அவர்களிடம் கின்னரம் இருந்திருக்க வேண்டும். அப்படிப் பாடும்போது தண்ணுமை, எக்கம், மத்தளி, யாழ், குழல், முழவம் ஆகிய இசைக் கருவிகள் கூடி இன்னிசை கூட்டுகின்றன. மத்தளி என்பது மத்தளமாக இருக்கலாம். அவ்வாறாயின் முழவுவேறு மத்தளம் வேறு என்று இந்தப் பாடலால் அறியலாம். யாழ் என்ற கருவியும் இக்காலத்தில் பழக்கத்திலிருந்து விடைபெறவில்லை என்று தெரிகிறது.

;துடி' என்ற கருவி உவமைப் பொருளாகக் குறிக்கப் பெற்றுள்ளது. பெரியதிருமொழியில், 'துடிகொள் நுண்ணிடை' (பெரியதிருமொழி: 1, 2, 3, 1) என்றும் தொண்டரடிப்பொடியாழ்வார் 'துடியிடை ' (திருப்பள்ளி: 10, 2) என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். துடியானது தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழக்கத்திலுள்ள தாளவிசைக் கருவி. அதனைப் பெண்களின் இடைக்கு உவமை கூறுவது காலங்காலமாக உள்ள பழக்கம். அவ்வாறு திவ்வியப் பிரபந்தத்திலும் காணமுடிகிறது. துடி தமிழரின் முக்கியமான இசைக் கருவிகளில் ஒன்று.

திவ்வியப் பிரபந்தத்தில் பண்ணிசைக் கருவிகளான யாழ், வீணை, கின்னரம், தும்புரு, குழல், வேய்ங்குழல் போன்ற பலவும் குறிக்கப்படுகின்றன. தாளவிசைக் கருவிகளான முழவம், தண்ணுமை, எக்கம், மத்தளம் (மத்தளி), துடி போன்றனவும் சங்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றைக் கொண்டு திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள் காலத்தில் தமிழர் இசை மிகச் சிறப்புற்று விளங்கியதாகக் கருதலாம்.

## தாளங்கள்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் பாடல்கள் பலவற்றைப் பாடுவதற்குரிய தாளங்கள் தரப்பெற்றுள்ளன. தேவாரப் பாடல்களில் தாளங்கள் குறிப்பிடப்படவில்லை. இசைப் பாடல்களுக்குத் தாளம் மிகவும் முக்கியமானது. பரிபாடல்கள் பலவற்றிற்குத் தூக்கு தரப் பெற்றுள்ளதைக் காணலாம். தாளங்களைத் தட்டுதல் அல்லது ஒற்றுதலை எண்ணிக் கணக்கிட்டுப் பெயர் கூறுவது இன்றுவரை வழக்கம். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள தாளங்கள் எவையெனக் காணலாம்.

## தாளங்கள்

1. இடையொத்து
2. ஏழொத்து
3. ஒன்பதொத்து
4. கடையொத்து
5. மழுமுடித்தல்

6. மிடைந்தொத்து
7. முடுகின மிடைந்தொத்து

ஏழு தாளங்கள் இருப்பதாக அறிய முடிகிறது. 'ஒத்து' என்பது ஒற்றுதலைக் குறிப்பதாகக் கருதலாம். கடை, இடை, மிடை ஆகியவற்றைத் தாளமிடும் வேக அளவைக் குறிப்பதாக நினைக்கலாம். முடுகின மிடைந்தொத்து மிக விரைவைக் காட்டுவதாக இருக்கலாம். ஏழொத்து, ஒன்பதொத்து என்பவை ஒற்றின் எண்ணிக்கையைக் கொண்டு பெயர் பெற்றிருக்கலாம். மழுமுடித்தல் என்ற பெயரைக் கொண்டு இந்தத் தாளத்தைப் பற்றிய கருத்தைக் கூறுவது கடினம். தற்காலத்திலும் லகுவை எண்ணிக் கணக்கிட்டு ஐந்து தாளங்களை கணக்கிட்டுள்ளதை இங்கு கருதலாம்.

அவை

(1) திஸ்ரம் - மூன்று லகு கொண்டது

(2) சதுஸ்ரம் - நான்கு லகு கொண்டது

(3) கண்டம் - ஐந்து லகு கொண்டது

(4) மிஸ்ரம் - ஏழு லகு கொண்டது

(5) சங்கீர்த்தணம் - ஒன்பது லகு கொண்டது

ஆனால் இவை ஒற்றுதல் என்று கருதுவதற்கு முடியாது. இது மாத்திரை (கால அளவு) குறிக்கும் பிரிவாகும். தட்டும் வீச்சுமுடைய கணக்கைக் கொண்ட தாளப் பிரிவுகள் ஏழு உள்ளது.

அவை

(1) துருவம்

(2) மட்டியம்

(3) ரூபகம்

(4) ஜம்பை தாளம்

(5) திருபுடைதாளம்

(6) அடதாளம்

(7) ஏகதாளம்

லகு கணக்கீடு கொண்டு ஐந்து பிரிவுகளையும் ஒற்றுதல் கணக்கீடு கொண்டு ஏழு பிரிவுகளையும் உறழ நோக்கித் தாளங்கள் முப்பத்தைந்து எனப் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகையான இன்றைய தாளங்களையும் திவ்வியப் பிரபந்த காலத் தாளங்களையும் ஒப்பிட்டுக் காணவேண்டியது இசைக் கலைஞரின் ஆய்வுப் புலமை மிக்கக் கடமையாகும். இரண்டுக்கும் உள்ள தொடர்பு உண்மைகளைக் கண்டுபிடிப்பது தமிழிசைக்குச் செய்யும் பெரும் சேவையாகும்.

## ஒப்பாய்வு

தண்ணுமை என்கின்ற இசைக் கருவி மிருதங்கம் என்று அழைக்கப்படுகிறது. குழல் என்பது புல்லாங்குழல் என்றும், கின்னரி என்ற இசைக் கருவி வழக்கில் குறைந்து விட்டது. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆலயங்களில் நிகழ்ச்சி செய்யும் பொழுது, அந்த பாசுரங்களில் கூறிய இசைக் கருவிகள் எதுவும் இக்காலத்தில் பயன்படுத்துவது இல்லை. இசைக் கருவிகளின் வளர்ச்சி குறைந்துக் கொண்டே வருகிறது. நவீன வளர்ச்சியால் திவ்வியப் பிரப்பந்தங்கள் ஆலயங்களிலே ஒலி நாடாக்களில் குறுந்தகடுகளில் ஒலிக்கச் செய்கின்றனர்.

தாளங்களிலும், சூலாதி சப்த தாளங்கள் 7 எனவும் லகு திருதம் அனு திருதம் ஆகிய அங்கங்களை கொண்டு ஐந்து சாதிகளின் அடிப்படையில் 35 தாளமாகிறது. இவைகளோடு 5 நடைகள்

சேர்ந்து 175 தாளங்கள் ஆகின்றது. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் பயண்டுத்திய தாளங்கள் இப்பொழுது மாறுபட்ட பெயரில் வழக்கில் பயன்பட்டு வருகிறது.

## முடிவுரை

ஞானம் முதிர்ந்து, பக்தியில் ஆழ்ந்து, ஆழ்வார்கள் அருளி செய்த நாலாயிர திவ்வியப் பிரபந்தம் கேட்டால், இறையருள் பெற்று மறுபிறவி இல்லாமல் அவ்வுலகத்திலும் நீங்காத ஆனந்தத்தோடு வாழலாம். ஆலயங்களில் எம்பெருமான் புறப்பாடு பொழுது சமஸ்கிருத வேதங்கள் பின்னே சொல்வார்கள். பெருமான் முன்பு நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பாசுரங்கள் பாடுவார்கள். எம்பெருமானை வழிநடத்துவது ஆழ்வார்கள் ஆழ்ந்து பாடிய, அழகு தமிழில் வளர்ந்த நாலாயிர திவ்வியப் பிரபந்தமே. இதில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள், தாளங்கள், இன்று வழக்கத்தில் குறைந்துக் கொண்டு வருகிறது. எதிர்கால தலைமுறையினர் பக்தி இலக்கியமான நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை வளர்ச்சி அடைய செய்வது அவசியமே.

## References

Perumal, U.A., (1984), Tamilarisai, International Institute of Tamil Studies, Chennai, India.

Sundaram, V.P.K., (1997) Tamilisai Encyclopedia, volume-3, Bharathidasan University, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License